Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
மாலையோர்க்கு முன்னேற்றக் இலவச
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 2 | சென்னை | தினசரி | 4 பக்கம் சனிக்கிழமை, டிசம்பர் 17, 2022 4 பக்கங்கள் ரூ.2/- இதழ் 156

# நாசாவின் மார்ஸ் ரோவர் மாதிரி சென்னை அமெரிக்க மையத்திற்கு வந்துள்ளது

## சென்னை அமெரிக்க துணைத் தூதரகத்தில் நாசாவின் செவ்வாய் கிரக தரையுலாவி (மார்ஸ் ரோவர்) "ஆப்பர்ச்சூனிட்டி"யின் முழு அளவிலான மாதிரி பொதுமக்களுக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது



சென்னை, டிசம்பர் 17 2022: அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி மற்றும் நிர்வாக அமைப்பான நாசாவின் மார்ஸ் ரோவர் "ஆப்பர்ச்சூனிட்டி"யின் முழு அளவிலான மாதிரியின் கண்காட்சியை சென்னையில் உள்ள அமெரிக்கத் துணைத் தூதர் ஜூடித் ரேவின் அமெரிக்க மையத்தில் வியாழக்கிழமை (டிசம்பர் 8) திறந்து வைத்தார். இந்தியாவிற்கான ஃபுல்பிரைட்-நேரு திட்ட அறிஞர் டாக்டர் வெங்கடேஸ்வரன் நாராயணசுவாமி உடன் இருந்தார். மார்ஸ் ரோவர் எனப்படும் இந்த செவ்வாய் கிரக தரையுலாவி கண்காட்சியைப் பார்வையிட மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அறிவியல் ஆர்வலர்களை சென்னை அமெரிக்க துணைத் தூதரகத்தில் அமைந்திருக்கும் அமெரிக்க மையம் வரவேற்கிறது. கார்னெல் பல்கலைக்கழக மாணவர்களால் உருவாக்கப்பட்ட இந்த முழு அளவிலான மாதிரி, வாஷிங்டன் டி.சி.யில் உள்ள ஸ்மித்சோனியனின் விமான மற்றும் விண்வெளி அருங்காட்சியகத்திலும், துபாய் 2020 சர்வதேச கண்காட்சியின் போது அமெரிக்க அரங்கிலும் காட்சிக்கு வைக்கப்பட்ட பின்னர் தற்போது சென்னை வந்தடைந்துள்ளது. இந்த தற்காலிக கண்காட்சியின் போது செவ்வாய் கிரக ஆய்வு குறித்த பல்வேறு சுவாரசிய செயல்பாடுகள் பள்ளி மாணவர்களுக்காக திட்டமிடப்பட்டுள்ளன. 2023 ஜனவரி வரை திங்கள் முதல் வெள்ளி காலை 10:00 மணி முதல் மாலை 4:00 மணி வரை கண்காட்சி பொதுமக்களுக்கு திறந்திருக்கும். தங்கள் மாணவர்களை அழைத்து வர விரும்பும் பள்ளிகள் அமெரிக்க மையத்தைத் தொடர்புகொண்டு முன்கூட்டியே பதிவு செய்து கொள்ள வேண்டும். 2003ல் தன் பயணத்தை தொடங்கிய நாசாவின் "ஆப்பர்ச்சூனிட்டி" செவ்வாய் கிரகத்தின் மேற்பரப்பில் நீர் இருந்ததற்கான ஆதாரங்களைத் தேடும் நோக்கத்துடன் 2004ல் செவ்வாய் கிரகத்தில் தரையிறங்கியது. செவ்வாய் கிரகத்தில் முன்னர் நீர் இருந்ததற்கான சான்றுகள் மற்றும் அந்த சமயத்தில் உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற இடமாக செவ்வாய் கிரகம் இருந்திருக்கக் கூடும் உள்ளிட்ட பல முக்கிய கண்டுபிடிப்புகளை தனது பணியின் போது ஆப்பர்ச்சுனிட்டி மேற்கொண்டது. திட்டமிடப்பப்பட்ட காலம் 90 நாட்களாக இருந்த போதும், செவ்வாய் கிரகத்தின் நிலப்பரப்பை சுமார் 15 ஆண்டுகளாக ஆப்பர்ச்சூனிட்டி ஆராய்ந்தது. சென்னை வந்துள்ள ஆப்பர்ச்சூனிட்டியின் மாதிரி குறித்து பேசிய அமெரிக்கத் துணைத் தூதர் ஜூடித் ரேவின், "ஐம்பத்தி இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, அதாவது 1970ல், சென்னையில் உள்ள அமெரிக்கத் துணைத் தூதரகத்தில் நிலவுப் பாறைகள் காட்சிப்படுத்தப்பட்ட போது சந்திர மண்டல ஆய்வு பற்றி அனைவரும் ஆர்வத்துடன் பேசி நிலவு-பூமி அமைப்பை பற்றி அன்றைய இந்திய இளம் தலைமுறையினர் புரிந்து கொள்ள ஊக்குவித்தனர். இன்று, செவ்வாய் கிரக ஆய்வில் சாதனை படைத்த மார்ஸ் ரோவரை காண நீங்கள் இங்கு வந்துள்ளீர்கள். தொலைத்தொடர்பு, செயற்கைக்கோள், வேளாண் கண்காணிப்பு மற்றும் வானிலை முன்னறிவிப்பு உள்ளிட்ட துறைகளில் முன்னேற்றத்திற்கு வழி வகுத்துள்ள

விண்வெளி ஆய்வுக்காக உருவாக்கப்பட்ட தொழில்நுட்பங்கள் நம் அன்றாட வாழ்வில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன," என்றார். தொடர்ந்து பேசிய அவர், "உலகத்தை மாற்றியமைப்பதற்கு நமது அமெரிக்க மற்றும் இந்திய விஞ்ஞானிகள் மற்றும் பொறியாளர்கள் இணைந்து பணியாற்ற வாய்ப்பு உள்ளது. நாசா மற்றும் இஸ்ரோ உட்பட விண்வெளித் துறையில் நமது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் தொடர்ந்து விரிவடையும் என்று நாங்கள் நம்புகிறோம். செவ்வாய் மற்றும் அதை தாண்டிய எதிர்கால பயணங்கள் இதில் அடங்கும். நீங்கள் எதைப் படிக்க விரும்புகிறீர்கள், எங்கு வேலை செய்ய விரும்புகிறீர்கள் என்பதைப் பற்றி சிந்திக்கத் தொடங்கும் போது, விண்வெளித் துறையில் உங்களுக்கு முன்னால் இருக்கும் அனைத்து வாய்ப்புகளையும் ஆராய உங்களைப் போன்ற மாணவர்களை இந்தக் கண்காட்சி ஊக்குவிக்கும் என்று நம்புகிறோம். இதன் மூலம் உங்களில் பலர் விண்வெளி கல்வி மற்றும் பணி குறித்து உத்வேகம் பெறுவீர்கள் என்று நம்புகிறோம்," என்றார்.

# ஒவ்வொரு நாளும் சவாலானது தான். நாம் சோதனைகளை கடந்து நம்பிக்கையோடு சாதிக்க வேண்டும் - துணைநிலை ஆளுநர் டாக்டர். தமிழிசை சௌந்தரராஜன்




சென்னை, டிசம்பர் 17 2022: விகடன் குழுமத்தின் சார்பில் பினாக்கில் விருதுகள் வழங்கும் விழா சென்னையில் நடைபெற்றது. துணைநிலை ஆளுநர் டாக்டர். தமிழிசை சௌந்தரராஜன் கலந்து கொண்டு பல்வேறு துறைகளில் சாதனை புரிந்த தொழில் முனைவோர்களுக்கு விருதுகளை வழங்கி சிறப்பித்தார்.

நிகழ்ச்சியில் துணைநிலை ஆளுநர் ஆற்றிய உரையின் சுருக்கம்.

அன்மைக்காலமாக, இந்தியாவில் தொழில் தொடங்குவது இலகுவாக இருக்கிறது. நாட்டின் 75வது சுதந்திர ஆண்டை கொண்டிருக்கின்றோம். இன்று பாரதப் பிரதமரின் ஸ்டார்ட் அப் திட்டத்தின் கீழ் மொத்தம் 75 ஆயிரம் ஸ்டார்ட் அப்கள் தொடங்கப்பட்டிருக்கிறது. கடந்த எட்டு ஆண்டுகளில் மட்டும் 67 சதவீதம் வளர்ச்சி கண்டிருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டிருக்கிறது என்பது சுதந்திர இந்தியாவின் மிகப் பெரிய புரட்சியாக பேசப்பட்டு வருகிறது.

கடந்த கால சரித்திரத்தை படிக்காமல் எதிர்கால சரித்திரத்தை எழுத முடியாது என்பார் அம்பேத்கர். நாம் சரித்திரத்தை தெரிந்து கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு நாளும் சவாலானது தான். நாம் சோதனைகளை கடந்து நம்பிக்கையோடு சாதிக்க வேண்டும்.

இன்று இளைஞர்கள் சென்னையில் மட்டுமல்ல ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழில் தொடங்க ஆர்வமாக இருக்கிறார்கள் என்று ஒரு ஆராய்ச்சி கூறுகிறது. விகடன் இதுபோன்ற விருதுகளை மாவட்டம் தோறும் நடத்த வேண்டும். அது தொழிற்சாலை தொடங்குபவர்களுக்கு ஒரு அங்கீகாரத்தை ஏற்படுத்தி தரும்.

ஒவ்வொருவரும் பிறக்கும்போதே ஒரு மிகப்பெரிய சக்தியோடு பிறக்கிறார்கள் என்று விவேகானந்தர் குறிப்பிடுகிறார். ஒவ்வொருவரும் பிறக்கும் போது ஒரு சக்தியோடு பிறக்கிறோம். அதை வெளிக்கொண்டு வருவதே நம்முடைய திறமை. நாம் திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

கோவிட் நமக்கு பலவற்றை சொல்லிக் கொடுத்திருக்கிறது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பொழுதும் முக்கியமானது. நாம் மகிழ்ச்சியோடு இருக்க வேண்டும். எல்லோரும் தினமும் உடற்பயிற்சி, யோகா, மருத்துவ சோதனைகள் செய்து கொள்ள வேண்டும். உடலையும் மனதையும் ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

எந்தவித பதட்டமும் இல்லாமல் வெற்றி பெறுவதற்கு முயற்சியும் பயிற்சியும் எடுத்துக் கொள்வோம். அது நம்மை வாழ வைக்கும்.

# மொழியை கற்றுக்கொள் என்று கூறுவதை, மொழி திணிப்பு என்று தவறாக முன்னிறுத்துகிறார்கள் - புதுச்சேரி துணைநிலை ஆளுநர் தமிழிசை சௌந்தர்ராஜன்




சென்னை, டிசம்பர் 17 2022: தமிழ் கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் நிகழ்ச்சியான 'தமிழ் பாரம்பரியம் மற்றும்

இந்திய மொழிகள் வாரம்' என்ற நிகழ்ச்சி டெல்லியில் உள்ள ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் கடந்த 12ம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. இன்று காரைக்கால் அம்மையார் தினம் என்ற தலைப்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் புதுச்சேரி துணைநிலை ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் கலந்து கொண்டார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், 'ஜவகர்லால் நேரு பல்கலைகழகத்தில், முதல் முறையாக பெண் துணை வேந்தர் நியமனம் செய்யப்பட்டுள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது. தமிழ், பழமையான மொழி. இங்கு பயிலும் மற்ற மொழி பேசும் மாணவர்கள் தமிழையும் கற்றுக்கொள்ள வேண்டும். தேனை போன்று தமிழ் இனிமையானது. எங்கெல்லாம் தமிழ் ஒலிக்கிறதோ, அங்கெல்லாம் நாங்கள் இருப்போம். அது டெல்லியாக இருந்தாலும் சரி. காசியாக இருந்தாலும் சரி' என்று பேசினார்.

நிகழ்ச்சிக்குப் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த ஆளுநர் தமிழிசை, 'தமிழ் கலாச்சாரம் குறித்து இந்த நிகழ்ச்சி நடைபெறுவது மகிழ்ச்சி. காசிக்கும் தமிழுக்கும் என்ன தொடர்பு என்பதை, அனைவரும் தெரிந்து கொள்ளும் வகையில் காசி தமிழ் சங்கமம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆயிரக்கணக்கான இளைஞர்கள் நமது தமிழ் கலாச்சாரத்தின் இணைப்பை பார்த்து தெரிந்து கொள்கின்றனர். அதேபோல டெல்லியில் நடைபெறும் இவ்வாறான நிகழ்வுகள் மூலம், மற்ற மொழி பேசும் மாணவர்களும் தமிழ் கலாச்சாரத்தை தெரிந்து கொள்ள முடியும்.

மாநிலத்திற்கு உள்ளேயே தமிழின் பெருமையை பேசுவதை விட, மற்ற மாநிலங்களுக்கு இதுபோன்ற நிகழ்ச்சிகள் மூலம் எடுத்துச் செல்லும்போது மற்ற மாநிலத்தை சேர்ந்த மாணவர்களுக்கும் தமிழை கற்கும் ஆசை வரும். நாமும் பிற மொழிகளை கற்க வேண்டும். நம் தமிழ் மொழியை மற்றவர்களும் கற்க வேண்டும் என்பதே எனது கோரிக்கை.

உலக சாஸ்திரங்கள் எல்லாம், தமிழ் மொழியில் வேண்டும் என மகாகவி கேட்டது போல, நாம் மொழியை வைத்து அரசியல் செய்வதை விட்டுவிட்டு, மொழியின் அவசியம் உணர்ந்து, அவரவர்க்கு எந்த மொழி தேவையோ, அதை கற்க அனைவருக்கும் சுதந்திரம் கொடுக்க வேண்டும். மொழியை கற்றுக்கொள் என்று கூறுவதை, மொழி திணிப்பு என்று தவறாக முன்னிறுத்துகிறார்கள். அது தவறு. நம் இனிப்பான தமிழ் மொழியை அனைவரும் கற்க வேண்டும்' என்று தெரிவித்தார்.

இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்
ALL ONLINE SERVICES

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

# மக்களும் மகேசனும் நினைத்தால் அரசியலுக்கு வருவேன்: லெஜெண்ட் சரவணன்



சென்னை, டிசம்பர் 17 2022: முன்னணி தொழிலதிபர் லெஜெண்ட் சரவணன் சமீபத்தில் வெளியான லெஜெண்ட் திரைப்படத்தின் மூலம் கதாநாயகனாக அறிமுகமானது அனைவரும் அறிந்ததே. பிரைடல் ஸ்டுடியோ நூரின் திறப்பு விழா கோவையில் நேற்று நடைபெற்றது. நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பிரைடல் ஸ்டுடியோவை திறந்து வைத்த லெஜெண்ட் சரவணன் தனது அடுத்த படம் குறித்த அறிவிப்பு விரைவில் வெளியாகும் எனவும் அதற்குண்டான ஆரம்பகட்ட வேலைகள் தொடங்கி விட்டதாகவும் கூறினார்.

இந்த நிகழ்வில் லெஜெண்ட் சரவணன் செய்தியாளர்களை சந்தித்து பேசிய போது, சினிமாவில் வந்த பிறகு, கதாநாயகர்களின் அடுத்த கட்ட நடவடிக்கை அரசியல் தான், உங்களின் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்றும், அரசியலுக்கு வர விருப்பம் உள்ளதா என்றும் கேட்டனர். இக்கேள்விக்கு பதில் அளித்த அவர், "மக்களும், மகேசனும் நினைத்தால் நிச்சயம் அரசியலுக்கு வருவேன்" என்று தெரிவித்தார். மேலும் பேசிய லெஜெண்ட் சரவணன், "சென்னையை போலவே கோயம்புத்தூரும் மிகப் பெரிய வளர்ச்சி அடைந்துள்ளது. அதை கண்கூடாக பார்க்க முடிகிறது. கடுமையாக உழைப்பவர்களை எனக்கு எப்போதும் பிடிக்கும். அப்பேற்பட்ட ஒருத்தர் தான் பிரைடல் ஸ்டுடியோ நூரின் நிறுவனர் நூர் முகமது. அவர் மிகவும் அன்பான மனிதர். அவரது அன்பிற்கு கட்டுப்பட்டு தான் இங்கு வந்தேன்," என்று கூறினார். நடிகர் நடிகைகளை மிகவும் அழகாக திரையில் காட்டுவதில் ஒப்பனை கலைஞர்களுக்கு மிகப்பெரிய பங்குண்டு என்றும், நூர் முகமது மிகவும் திறமையான கலைஞர் என்றும் லெஜெண்ட் சரவணன் கூறினார். தமிழக அரசு சிறப்பாக செயல்பட்டு வருவதாகவும் அவர் பாராட்டு தெரிவித்தார்.

# அங்காரகன் மூலம் மீண்டும் வில்லன் அவதாரம் எடுக்கும் சத்யராஜ்



சென்னை, டிசம்பர் 17 2022: ஜூலியன் & ஜெரோமா இன்டர்நேஷனல் நிறுவனம் சார்பில் ஜோமோன் பிலிப் மற்றும் ஜீனா ஜோமோன் தயாரிப்பில் உருவாகியுள்ள படம் 'அங்காரகன்'. இந்த படத்தின் கதாநாயகனாக ஸ்ரீபதி நடித்துள்ளார். மேலும் இந்த படத்தின் திரைக்கதையை எழுதியுள்ளதுடன், கிரியேட்டிவ் இயக்குனராகவும் பணியாற்றியுள்ளார் ஸ்ரீபதி. இவர் பிரபல சாப்ட்வேர் நிறுவனம் ஒன்றில் சீனியர் மேலாளராக பணியாற்றியவர். சினிமாவின் மீது, குறிப்பாக நடிப்பின் மீதுள்ள ஆர்வத்தால் இந்த படத்தின் மூலம் கதாநாயகனாக களமிறங்கியுள்ளார்.

இந்த படத்தை மோகன் டச்சு என்பவர் இயக்குகிறார். இவர் பிரபல பாலிவுட் இயக்குநர் ராம்கோபால் வர்மாவிடம் சர்க்கார்-3, கில்லிங் வீரப்பன் மற்றும் சின்ட்ரெல்லா ஆகிய படங்களில் உதவி இயக்குனராக, ஒளிப்பதிவாளராக பணிபுரிந்த அனுபவம் கொண்டவர்.

இந்த படத்தில் டெரர் போலீஸ் அதிகாரி கதாபாத்திரத்தில் சத்யராஜ் நடித்துள்ளார். மலையாள நடிகை நியா இந்த படத்தில் கதாநாயகியாக நடிப்பதன் மூலம் தமிழில் அறிமுகமாகிறார். சமீபத்தில் மலையாளத்தில் இயக்குனர் வினயன் இயக்கத்தில் வெளியாகி வெற்றி பெற்ற பத்தொன்பதாம் நூற்றாண்டு படத்தில் கதாநாயகியாக நடித்துள்ள நியா, தெலுங்கில் காமெடி நடிகர் அலியுடன் இணைந்து லாயர் விஸ்வநாத் படத்திலும் நடித்துள்ளார்.

மேலும் அங்காடித்தெரு மகேஷ், ரெய்னா காரத், ரோஷன், அப்புக்குட்டி, தியா, நேகா ரோஸ், குரு சந்திரன், கேசிபி பிரபாத் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்

பீஸ்ட் படத்தில் இடம்பெற்ற ஹிட் பாடலான ஜாலியோ ஜிம்கானா உள்ளிட்ட 125க்கும் மேற்பட்ட சூப்பர்ஹிட் பாடல்களை எழுதிய கு.கார்த்திக் இந்த படத்தின் மூலம் இசையமைப்பாளராக அறிமுகமாகிறார்.

சூது கவ்வும், இன்று நேற்று நாளை, மரகத நாணயம் உள்ளிட்ட படங்களில் வசனங்களில் பங்களிப்பு செய்த கருந்தேள் ராஜேஷ் இந்த படத்தின் வசனங்களை எழுதியுள்ளார்.

இந்த படம் 2023 கோடை விடுமுறைக்கு வெளியாகும் வரையில் தயாராகி வருகிறது என கூறியுள்ளார் படத்தின் நிர்வாக தயாரிப்பாளர் எஸ்.கிறிஸ்டி

**தொழில்நுட்பக் குழுவினர் விபரம்**

ஒளிப்பதிவு & இயக்கம் ; மோகன் டச்சு திரைக்கதை ; இயக்கம் (கிரியேடிவ்) ; ஸ்ரீபதி ஒளிப்பதிவாளர் (2வது) ; மாநில அரசு விருது பெற்ற ஆர்.கலைவாணன் வசனம் ; கருந்தேள் ராஜேஷ் படத்தொகுப்பு ; மதுரை வளர் பாண்டியன் இசை இயக்குநர்: கு. கார்த்திக் சண்டை காட்சிகள் ; ஜாக்கி ஜான்சன் நடனம் ; வாசு நவநீதன் கலை இயக்குனர் ; கே மதன் நிர்வாக தயாரிப்பாளர் ; எஸ்.கிறிஸ்டி தயாரிப்பு வடிவமைப்பு ; எல். விவேக் (பிரைம்ரோஸ் எண்டர்டைன்மெண்ட்) மக்கள் தொடர்பு ; ஏ.ஜான்

# டகேடா, பரம்பரை ஆஞ்சியோடெமா நோயாளிகளுக்கு நோய்த்தடுப்புக்கான முதல் சி1-ஐ என் எச் ஆன சின்ரைஸ் ஐ இந்தியாவில் அறிமுகப்படுத்துகிறது

சென்னை, டிசம்பர் 17 2022: ஒரு உலகளாவிய மதிப்புகள் அடிப்படையிலான, ஆர்&டி-உந்துதல் உயிரி மருந்து தயாரிப்பு நிறுவனமான டகேடா பயோஃபார்மாசூட்டிகல்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் (முன்னர் பாக்சல்டா பயோசயின்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் என அறியப்பட்டது), பரம்பரை ஆஞ்சியோடெமா நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதற்கான ஒரு புதுமையான ஊசி மூலம் செலுத்தத்தக்க பரிந்துரைக்கப்பட்ட மருந்தான சின்ரைஸ் ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. செயல்திறன் மற்றும் பாதுகாப்பை நிரூபிக்கும் எட்டு வருட உலகளாவிய மருத்துவ அனுபவத்துடன், சின்ரைஸ் ஆனது, எச் ஏ ஈ க்கான குறுகிய மற்றும் நீண்ட கால நோய்த்தடுப்பு சிகிச்சை மற்றும் காலமுறை சிகிச்சையில் ஒரு முன்னேற்றத்தைக் குறிக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது. மேலும், சின்ரைஸ் ஆனது, எச் ஏ ஈ அறிகுறி மேலாண்மை மற்றும் எதிர்கால ஆஞ்சியோடெமா தாக்குதல்களைத் தடுப்பதற்காக எப் டி ஏ & ஈ எம் ஏ ஆல் அங்கீகரிக்கப்பட்ட, முன்னோடி சி1 எஸ்டெரேஸ் தடுப்பானாகும் (சி1-ஐ என் எச்) [2]

சின்ரைஸ் இந்தியாவில் கீழ்கண்டவற்றிற்கு பரிந்துரைக்கப்படுகிறது :

எச் ஏ ஈ உடன் பெரியவர்கள், இளம் பருவத்தினர் மற்றும் 6 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட குழந்தைகளில் ஆஞ்சியோடெமா தாக்குதல்களின் வழக்கமான தடுப்பு (நோய்த்தடுப்பு[3].

ஆஞ்சியோடெமா தாக்குதல்களுக்கான சிகிச்சை மற்றும் எச் ஏ ஈ உடன் பெரியவர்கள், இளம் பருவத்தினர் மற்றும் 2 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட குழந்தைகளில் ஆஞ்சியோடெமா தாக்குதல்களின் முன்-செயல்முறை தடுப்பு [3].

வெளியீட்டு விழாவில் பேசிய டகேடா பயோஃபார்மாசூட்டிகல்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் இன் பொது மேலாளர் செரினா பிஷ்ஷர், "டகேடாவில், எங்களின் முக்கிய சிகிச்சைப் பகுதிகள் முழுவதும், பூர்த்தி செய்யப்படாத மருத்துவத் தேவைகளைப் பூர்த்தி செய்ய புதுமையான சிகிச்சையை வழங்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். சின்ரைஸ் இன் இந்த அறிமுகம், இந்தியாவில், எச் ஏ ஈ நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதில் உள்ள இடைவெளியைக் குறைக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். இந்தியாவில் அரிதான நோய் நோயாளிகளுக்கான எங்கள் அர்ப்பணிப்பை, இந்த அறிமுகம் மேலும் அதிகரிக்கிறது." என்று கூறினார்.

டகேடா பயோஃபார்மாசூட்டிகல்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் இன் ரேர் டிசீசஸ் ஃபிரான்சைஸ் தலைவர் சோனி பால் மேலும் கூறுகையில், "தரவுகளின்படி, நாட்டில் தற்போது 30,000[4] க்கும் மேற்பட்ட கண்டறியப்படாத நோயாளிகள் உள்ளனர். நோய் கண்டறிதல் மற்றும்

சிகிச்சை இல்லாததால் இந்த நோயாளிகள் அவதிப்படுகின்றனர். சின்ரைஸ் இன் இந்த அறிமுகம் மூலம், எச் ஏ ஈ இன் கடுமையான தாக்குதல்களைக் குறைப்பதும், நோய்த்தடுப்பு முறை மூலம் எச் ஏ ஈ தாக்குதல்களைத் தடுப்பதை ஆதரிப்பதும், இவ்வாறு, எச் ஏ ஈ நோயாளிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவது எங்கள் நோக்கமாகும்." என்று கூறினார்.

பரம்பரை ஆஞ்சியோடெமா (எச் ஏ ஈ) என்பது ஒரு அரிய மரபணு நிலையாகும், இது உடலின் பல்வேறு பகுதிகளில் மூட்டுகள், முகம், வயிறு மற்றும் குரல்வளை போன்றவற்றில் வீக்கத்தை ஏற்படுத்துகிறது[5,6]. எச் ஏ ஈ ஆனது மரபணுவில் ஏற்படும் மாற்றத்தால் ஏற்படுகிறது, இது சி1 எஸ்டெரேஸ் இன்ஹிபிட்டர் எனப்படும் புரதத்தை உற்பத்தி செய்கிறது.[6], இது அதன் குறைக்கப்பட்ட நிலை அல்லது சமரசம் செய்யும் செயல்பாட்டிற்கு வழிவகுக்கிறது. எச் ஏ ஈ இன் அறிகுறிகள் பெரும்பாலும் குழந்தைப் பருவத்தில் காணப்படுகின்றன, மேலும் எந்த வயதிலும் தாக்குதல்கள் ஏற்படலாம் என்றாலும், ஆரம்ப தாக்குதல் மிகவும் கடுமையான நோயின் போக்கைக் கணிக்கக்கூடும்[6]. ஒரு தெளிவான தூண்டுதல் இல்லாமல் குழந்தைகளில் அடிக்கடி தாக்குதல்கள் நிகழ்கின்றன,[5] மேலும் பள்ளி, செயல்பாடுகள் மற்றும் விளையாட்டுகளில் குழந்தையின் பங்கேற்பைப் பாதிக்கலாம், இதனால் அவர்கள் சமூகத்தில் தனிமைப்படுத்தப்பட்டதாக உணரலாம். இது அவர்களை சமூக ரீதியாக தனிமையாக உணரவைக்கும்[7,8]. குரல்வளையில் (குரல் பெட்டி) அல்லது மூச்சுக்குழாய் (காற்று குழாய்) வீக்கம் தாக்குதல்கள் வெளிப்படும் கடுமையான சந்தர்ப்பங்களில், இது உயிருக்கு ஆபத்தானது[5,6].

உடல் திசுக்களின் விரைவான வீக்கத்தை ஏற்படுத்துகிறதினால், இந்த நோய் இரத்த நாளங்களுக்கு வெளியே திரவ திரட்சியின் தொடர்ச்சியான நிகழ்வுகளால் பொதுவாக கண்டறியப்படுகிறது, எச் ஏ ஈ இன் இந்த அறிகுறிகள் ஒரு ஒவ்வாமை எதிர்வினை போல இருக்கலாம்; எவ்வாறாயினும், எச் ஏ ஈ இல் சாத்தியமான அபாயகரமான விளைவுகளையும் ஏற்படுத்தலாம். உடல்நல ஆரோக்கிய நிபுணர்களிடையே விழிப்புணர்வு இல்லாததால், நாட்டில் எச் ஏ ஈ மிகவும் குறைவாகவே கண்டறியப்பட்டுள்ளது.

டகேடா பயோபார்மசூட்டிகல்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் (முன்னர் பாக்சல்டா பயோசயின்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் என அறியப்பட்டது) என்பது ஜப்பானை தலைமையிடமாகக் கொண்ட டகேடா பார்மாசூட்டிகல் கம்பெனி லிமிடெட் நிறுவனத்தின் குழுமத்தின் ஒரு பகுதியாகும். இந்நிறுவனம் நாட்டில் நோயெதிர்ப்பு, மரபணு நோய்கள், ரத்தக்கசிவு, புற்றுநோயியல் மற்றும் இரைப்பை குடல் துறைகளில் கவனம் செலுத்துகிறது. மருந்து தயாரிப்பில் உலகளாவிய தலைவராக, டகேடா நிறுவனம், நிறுவனத்தின் தேர்ந்தெடுத்த சிகிச்சைப் பகுதிகளில் பயனுள்ள மற்றும் புதுமையான சிகிச்சைகளை மேம்படுத்துவதற்கு விரிவான ஆராய்ச்சியை இயக்குவதில் கவனம் செலுத்துகிறது.

# இந்தியாவில் மன ஆரோக்கியத்தின் சுமையை மேலும் குறைக்க, மெடிக்ஸ் குளோபல் மற்றும் எம்பவர் கூட்டு சேர்ந்துள்ளன

சென்னை, டிசம்பர் 17 2022: உலகளவில், உலகளாவிய தொற்றுநோயால் துரிதப்படுத்தப்பட்ட மனநலப் பிரச்சனைகளின் தொடர்ச்சியான அதிகரிப்பை, இந்த உலகம் காண்கிறது.

ஒரு உலகளாவிய சுகாதார மேலாண்மை நிறுவனமான மெடிக்ஸ், 300 க்கும் மேற்பட்ட உள்ளக மருத்துவர்களைக் கொண்ட குழு மற்றும் 4,500 க்கும் மேற்பட்ட உலக முன்னணி நிபுணர்களைக் கொண்ட உலகளாவிய தர அங்கீகாரம் பெற்ற நெட்ஒர்க் மூலம் மில்லியன் கணக்கான வாடிக்கையாளர்களுக்கு, சுகாதாரத்தேவைகளின் பயனுள்ள தீர்வுகளை வழங்குவதற்கு, ஒரு மூலோபாய கூட்டாண்மைக்குள் நுழைந்துள்ளது. ஆதித்யா பிர்லா கல்வி அறக்கட்டளையின் முன்முயற்சி, மற்றும் இந்தியாவின் மனநலத் துறையில் முன்னணியில் உள்ள எம்பவர் உடன், 600 அனுபவமிக்க மனநல நிபுணர்களை ஒன்றிணைத்து, உலகத் தரம் வாய்ந்த, அறிவியல் ரீதியாக நிரூபிக்கப்பட்ட தலையீட்டு நுட்பங்களை வழங்கி, 121 மில்லியனுக்கும் அதிகமான வாழ்க்கைகளில் நேர்மறையாக விளைவை கொண்டிருக்கிறது. ஒத்துழைப்பின் ஒரு பகுதியாக, எம்பவர் மற்றும் மெடிக்ஸ் ஆகியவை இந்தியாவில் மனநலச் சேவைகளை இன்னும் அணுகக்கூடியதாக மாற்றுவதற்கு ஒருங்கிணைந்த மற்றும் மேம்பட்ட தொழில்நுட்ப தீர்வுகளை வழங்கும்.

எம்பவர் மற்றும் மெடிக்ஸ் இணைந்து, உதவி மற்றும் ஆதரவைப் பெறுவதற்கான புதிய வழிகளை ஊக்குவிக்கும் அதே வேளையில், இந்தியாவில் மனநல விவாதத்தை மாற்றும். இந்த கூட்டாண்மை மன மற்றும் உணர்ச்சி ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலுக்கான புதிய, முழுமையான அணுகுமுறையைக் கொண்டுவருகிறது, குறிப்பாக நாட்டின் இளைஞர்களைச் சென்றடைய வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த மூலோபாய ஒத்துழைப்பின் ஒரு பகுதியாக, மெடிக்ஸ் இந்தியா, முன்னணி காப்பீட்டாளர்கள், கார்ப்பரேட் வேலையமர்த்துபவர்கள் மற்றும் பிற பங்குதாரர்கள் உள்ளடக்கிய அதன் வாடிக்கையாளர்களுக்கும் கூட்டாளர்களுக்கும் எம்பவர் கிளினிக்குகள் மற்றும் மெய்நிகர் மனநல சேவைகளுக்கான அணுகலை வழங்கி, எம்பவர் இன் மனநல சேவைகளை அதன் பல்வேறு பராமரிப்பு திட்டங்களில் இணைக்கும், இந்த ஒத்துழைப்பின் மூலம் எம்பவர், ஒரு அறிவு மற்றும் சேவைப் பங்காளியாக மனநலத் துறையில் அதன் நிபுணிதத்துவத்தைப்பெற்று, மனநல ஆதரவைத் தேடும் நோயாளிகளுக்கு பல்வேறு நிரூபிக்கப்பட்ட மனநலத் தீர்வுகள் மற்றும் சிகிச்சைகளை வழங்கும், அதேசமயம் மெடிக்ஸ், தர உறுதி, இலக்கு அமைக்கும் உத்திகள், மருத்துவ நடைமுறைகள், மனம் மற்றும் உடலின் கணினிமயமாக்கப்பட்ட மதிப்பீடுகள், முடிவுகளை பகுப்பாய்வு மற்றும் கண்காணிப்பதற்கான புதிய முறைகள் மற்றும் பிறவற்றில் அதன் உலகளாவிய நிபுணத்துவத்தை வழங்கும். இதனால் இந்தியாவில் இதுவரை மனநல பராமரிப்பு எவ்வாறு உணரப்பட்டு அணுகப்படுகிறது என்பதை மறுவடிவமைக்கிறது.

எம்பவர் இன் நிறுவனர் மற்றும் தலைவி டாக்டர் நீர்ஜா பிர்லா கூறுகையில், "எம்பவர், இந்தியாவில், மனநலத் துறையில் எப்போதும் முன்னோடியாக இருந்து வருகிறது, மேலும் இந்த கூட்டாண்மை மீண்டும் இந்த துறையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துபவராக நமது நிலையை உறுதிப்படுத்தும் ஒரு படியாகும். உளவியல், உடல் மற்றும் சமூக காரணிகளுக்கு இடையே உள்ள சிக்கலான தொடர்பு காரணமாக, மருத்துவ நிலைமைகள் உள்ளவர்களுக்கு மனநலப் பிரச்சினைகள் பொதுவானவை, இதனால் மன மற்றும் உடல் ஆரோக்கியம் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தின் முக்கிய கூறுகளாகும். இப்போது ஒரே தளத்தில் உடல் மற்றும் மனநலச் சேவைகளைத் தேர்வுசெய்யக்கூடிய நோயாளிகளுக்கு இந்த ஒத்துழைப்பு முழுமையான தீர்வுகளை வழங்குகிறது" இது போன்ற ஒத்துழைப்புகள் இந்தியாவில் முழுமையான சுகாதார நிர்வாகத்தில் ஒரு புதிய அத்தியாயத்தைக் குறிக்கும் மற்றும் மன மற்றும் உடல் ஆரோக்கியத்திற்கு சமமான முக்கியத்துவத்தை அளிக்கும் என நம்புகிறோம். இவ்வாறு ஈடுபாடு, அணுகல் மற்றும் மன ஆரோக்கியத்துடன் தொடர்புடைய சுமையை ஒழிக்க ஊக்குவிக்கிறோம்." என்று கூறினார்.

"எம்பவர் உடன் கூட்டாளியாக இருப்பதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம், மக்களின் வாழ்க்கைகளில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துகிற இரண்டு பிராண்டுகளுக்கும் இடையே வலுவான இணக்கம் உள்ளதை நாங்கள் காண்கிறோம், " என்று மெடிக்ஸ் இன் தலைவரும் மற்றும் சி ஈ ஓ ஆன திருமதி சிகல் அட்ஸ்மோன் கூறினார், "மனநலம் என்பது, அவர்கள் நினைக்கும், உணரும் மற்றும் செயல்படும் விதத்தில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்துகிற மிகவும் பரந்த நிலைமைகளின் தொகுதியாகும். இளைய தலைமுறையினர் பல்வேறு சூழ்நிலைகளால் உந்தப்பட்டு மற்றும் அடிக்கடி கொண்டு வரும் அழுத்தங்களை அனுபவித்து வருகின்றதையும், இந்தச் சவால்களை நேர்மறையாகச் சமாளிப்பதற்கான முறைகள் அவர்களுக்கு இல்லாததையும் நாம் காண்கிறோம். மன ஆரோக்கியத்துடன் களங்கத்தை விலக்கி, சவால்களை சமாளிக்க உறுதியான மற்றும் செயல்படக்கூடிய முறைகளை வழங்கும் போது சம்பாஷணைகள் மற்றும் கலந்துரையாடல்களையும் ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளோம்." என்று கூறினார்.

மனநலம் இன்று இந்தியாவில், குறிப்பாக இளைஞர்களிடையே மிகவும் அழுத்தமான பிரச்சினைகளில் ஒன்றாக இருக்கிறது. டபிள்யூ எச் ஓ இன் வேர்ல்ட் மெண்டல் ஹெல்த் ரிப்போர்ட் 2022 இன் படி, கடுமையான மனநல நிலைமைகள் உள்ளவர்கள், முக்கியமாக தடுக்கக்கூடிய உடல் நோய்களால் சாதாரண மக்களை விட 10 முதல் 20 ஆண்டுகளுக்கு முன்னதாகவே இறக்கின்றனர், "மனநலம் மற்றும் பணியிடத்தில் நல்வாழ்வு" என்ற தலைப்பில், டெலாய்ட் இன் 2022 கணக்கெடுப்பின்படி, 80 சதவீத இந்திய பணியாளர்கள் முந்தைய ஆண்டில் மனநலப் பிரச்சினைகள் இருப்பதாக ஒப்புக்கொண்டனர். இந்த எச்சரிக்கையூட்டும் புள்ளிவிவரங்கள் இருந்தபோதிலும், பாதிக்கப்பட்ட பதிலளித்தவர்களில் 39% சமூக களங்கம் காரணமாக தங்களின் அறிகுறிக்கு சிகிச்சை பெறுவதைத் தடுக்கிறது என்று கூறுகிறார்கள்.

2023 முதல் இந்தியாவில், இந்த கூட்டாண்மை மூலம் மனநலச் சேவைகளுக்கு சிறந்த அணுகலை வழங்க எம்பவர் மற்றும் மெடிக்ஸ் உறுதிபூண்டுள்ளது!

# ‘ரேடியோ சிட்டி சூப்பர் சிங்கர்’ சீசன் 14 தொடக்கம்

சென்னை, டிசம்பர் 17 2022: இந்தியாவின் முன்னணி வானொலி நிலையமான ரேடியோ சிட்டி, ‘ரேடியோ சிட்டி சூப்பர் சிங்கர்’ சீசன் 14 இன் தொடக்கத்தை அறிவித்துள்ளது.

ரேடியோ சிட்டி சூப்பர் சிங்கர் நாடு முழுவதும் உள்ள ஆர்வமுள்ள பாடகர்களுக்கு மிகப்பெரிய மேடைகளில் ஒன்றாக அறியப்படுகிறது. ரேடியோ சிட்டி வானொலித் துறையில் 'பாடுதல் திறமை வேட்டை'யின் முன்னோடியாகப் போற்றப்படுகிறது, மேலும் இந்த ஆண்டு 'அகர் ஹை மியூசிக் சே பியார், தோ பானோ சிட்டி கே அக்லே சிங்கிங் ஸ்டார்' என்ற கோஷத்துடன் அதன் பாரம்பரியத்தைத் தக்கவைக்க உறுதிபூண்டுள்ளது.

இந்தியாவின் சோல்ஃபுல் சூஃபி மேஸ்ட்ரோவாக அங்கீகரிக்கப்பட்ட பத்மஸ்ரீ கைலாஷ் கெர், சிறந்த பாடகர்களைக் கண்டறிந்து, நிகழ்ச்சியின் மூலம் அவர்களை நட்சத்திரப் புகழ் பெறத் தயார்படுத்துவதற்காக தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக வழிகாட்டியாகத் திரும்புகிறார். நாடு முழுவதும் பாடும் திறமையை வெளிப்படுத்தும் 13 வெற்றிகரமான சீசன்களுக்குப் பிறகு, ரேடியோ சிட்டி சூப்பர் சிங்கரின் சீசன் 14 ஆனது, ஆன்-ஏர் மற்றும் ஆன்-கிரவுண்ட் செயல்பாடுகளை தவிர, முக்கிய டிஜிட்டல் தளங்களில் அதன் இருப்பை அதிகரிக்கும். 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்களும் பெண்களும் அல்லது பாடி தங்கள் திறமையை வெளிப்படுத்த விரும்புவதை இலக்காகக் கொண்ட எந்த பருவத்தினரும் டிசம்பர் 6 ஆம் தேதி முதல் நடத்தப்படும் தேர்வில் கலந்து கொண்டு தங்கள் திறமைகளை வெளிப்படுத்தலாம். டிசம்பர் 18 முதல் 20 வரை வாக்குப்பதிவு நடைபெறும் மற்றும் ரேடியோ சிட்டி சூப்பர் சிங்கரின் இறுதிப்போட்டி டிசம்பர் 21 முதல் 23 வரை திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு சந்தையிலிருந்தும் சிறந்த 5 பாடகர்கள் பட்டியலிடப்பட்டு, ஒவ்வொரு சந்தையிலிருந்தும் ஒரு வெற்றியாளர் மற்றும் ரன்னர் - அப் அறிவிக்கப்படுவார்கள்.

ரேடியோ சிட்டி சூப்பர் சிங்கரின் சீசன் 14 இன் ஆரம்பம் குறித்து பேசிய ரேடியோ சிட்டியின் தலைமை நிர்வாக அதிகாரி அஷித் குக்கியன், "ரேடியோ சிட்டி சூப்பர் சிங்கரின் சீசன் 14 இன் தொடக்கத்தை அறிவிப்பதில் எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. நாடெங்கிலும் உள்ள அனைத்து வளரும் பாடகர்களும் தங்கள் உள்ளார்ந்த பாடும் திறமையை வெளிப்படுத்த இந்த தளத்தைப் பயன்படுத்த முன்வருவதற்கான ஒரு தளம்.

ரேடியோ சிட்டி சூப்பர் சிங்கர் எங்களின் முதன்மை சொத்தாக இருந்து, கடந்த 13 சீசன்களில் பல நபர்களின் வாழ்க்கைக்கு மதிப்பு சேர்த்துள்ளது. வானொலித் துறையில் பாடும் திறமை வேட்டையின் முன்னோடிகளாகப் புகழ் பெற்ற நாங்கள், இந்த மேடையில் எங்கள் பார்வையாளர்களுக்கு மிகப் பெரிய வாய்ப்பைத் தொடர்ந்து வழங்கி வருகிறோம்.

பாடகர்களுக்கு வழிகாட்டுவதற்காக சுரோன் கே சர்தாஜ் பத்மஸ்ரீ கைலாஷ் கெர் இந்த சீசனில் மீண்டும் வந்துள்ளார் என்பதை பகிர்ந்து கொள்வதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். இந்த ஆண்டிற்கான எங்களின் டேக்லைன், ‘அகர் ஹை மியூசிக் சே பியார், தோ பானோ சிட்டி கே அக்லே சிங்கிங் ஸ்டார்,’ உங்கள் இசை ஆர்வம் உங்களை நகரத்தின் அடுத்த பாடும் சூப்பர் ஸ்டாராக மாற்றும் என்ற நம்பிக்கையுடன் எதிரொலிக்கிறது.

இந்த முயற்சியின் மூலம், ரேடியோ சிட்டி பல்வேறு ஆக்கப்பூர்வமான அணுகுமுறைகளைப் பயன்படுத்துவதன் மூலமும், தனித்துவமான கலாச்சாரங்களைச் சென்றடைவதன் மூலமும் நகரத்தின் சிறந்த திறமைகளை முன்னணிக்குக் கொண்டுவருவதற்கான பாரம்பரியத்தை தொடர்ந்து நிலைநிறுத்துகிறது.

ரேடியோ சிட்டி சூப்பர் சிங்கரின் மற்றொரு சீசனில் பங்கேற்பதற்கான உற்சாகத்தை வெளிப்படுத்திய கைலாஷ் கெர், "ரேடியோ சிட்டி எனது இசைப் பயணத்தின் ஒரு பகுதியாக மாறியுள்ளது, மேலும் 'ரேடியோ சிட்டி சூப்பர் சிங்கர்' மூலம் வரவிருக்கும் பாடகர்களுக்கு வழிகாட்டுவதில் நான் மிகவும் ஆர்வமாக உள்ளேன். நாடு முழுவதிலுமிருந்து வளரும் பாடகர்களின் திறமையை இது உண்மையிலேயே கொண்டாடுகிறது.

ரேடியோ சிட்டி மட்டுமே பாடும் திறமையை அங்கீகரிக்கும் நாட்டிலுள்ள ஒரே வானொலி தளமாகும், மேலும் இந்த மரபின் ஒரு பகுதியாக இருப்பது எனக்கு ஒரு பெரிய மரியாதை. கடந்த இரண்டு சீசன்களாக ரேடியோ சிட்டி சூப்பர் சிங்கருடன் நான் இணைந்திருக்கிறேன், இந்த ஆண்டும் இந்தியா முழுவதிலும் உள்ள சிறந்த பாடகர்களை ஆடிஷனுக்குத் தேடுவோம். இந்தியாவின் பிரகாசமான பாடும் நட்சத்திரங்களில் சிலரின் கவனத்தை ஈர்க்கும் அதன் பாரம்பரியத்தைத் தொடர, ரேடியோ சிட்டி நகரங்களின் அசாதாரண குரல்கள் மற்றும் திறமைக் குழுவை ஆராய இந்த முயற்சியை கட்டமைத்துள்ளது. ரேடியோ சிட்டியின் மூலம் சிறந்த பாடகர்களைத் தேடுவதற்கும், அவர்களை




நட்சத்திர அந்தஸ்துக்கு தயார்படுத்துவதற்கும் கிடைத்த வாய்ப்பு ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும், மேலும் ரேடியோ சிட்டி சூப்பர் சிங்கரின் சீசன் 14 இன் சிறந்த நிகழ்நேர பங்கேற்பையும் நகரத்தை மையமாகக் கொண்ட இறுதிப் போட்டியையும் எதிர்பார்க்கிறேன்."

கடந்த 13 சீசன்களில், ரேடியோ சிட்டி சூப்பர் சிங்கர் பல பாடும் சூப்பர் ஸ்டார்களுக்கான முக்கிய மையமாக செயல்பட்டுள்ளது, மேலும் இந்த வெற்றிகரமான சொத்து மதிப்புமிக்க தேசிய மற்றும் சர்வதேச பாராட்டுகளை வென்றுள்ளது.

இந்த சொத்தின் மிகவும் நம்பிக்கைக்குரிய அம்சம் என்னவென்றால், 39 நகரங்களில் இந்த அளவில் நடத்தப்பட்ட ஒரே பாடும் திறமை வேட்டை இதுவாகும், அங்கு ஒவ்வொரு நகரமும் அதன் சொந்த சூப்பர் சிங்கரைப் பெறுகின்றன. சுவாரஸ்யமாக, இந்த ஆண்டு ரேடியோ சிட்டி சூப்பர் சிங்கரின் டைட்டில் ஸ்பான்சராக ஏதர் எனர்ஜி உள்ளது. ரேடியோ சிட்டி சூப்பர் சிங்கரின் 14வது சீசன் ரேடியோ, டிஜிட்டல் மற்றும் ஆன்-கிரவுண்ட் ஆக்டிவேஷன்களில் பரவலாக விளம்பரப்படுத்தப்படும். பங்கேற்பாளர்கள் https://www.radiocity.in/radiocitysupersinger ஐப் பார்வையிடுவதன் மூலம் பதிவு செய்யலாம்.

# தமிழகத்தை சேர்ந்த 36 ஆயிரம் சிறு நிறுவனங்களை டிஜிட்டல் மயமாக்க உதவும் மீஷோ

சென்னை, டிசம்பர் 17 2022: இந்தியாவில் மிக வேகமாக வளர்ந்து வரும் ஆன்லைன் வர்த்தக தளமான மீஷோ, ஜீரோ கமிஷன் மற்றும் ஜீரோ அபராதம் என்னும் திட்டத்தை அறிவித்ததன் காரணமாக தற்போது தமிழகத்தில் உள்ள ஏராளமான சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் இதன் ஆன்லைன் இணையதளத்தில் பொருட்களை விற்பனை செய்து வருகின்றன. பண்டிகை காலத்தில் தமிழகத்தில் மட்டும் 1 கோடியே 50 லட்சம் வாடிக்கையாளர்கள் குறைந்த விலையில் பல்வேறு வகையான பொருட்களை மீஷோ ஆன்லைனில் வாங்கி உள்ளனர். இது கடந்த ஆண்டு இதே காலக்கட்டத்துடன் ஒப்பிடுகையில் 72 சதவீதம் அதிகம் ஆகும். இதில் ஆடைகள், வீடு மற்றும் சமையலறைக்கு தேவையான பொருட்கள், எலக்ட்ரானிக்ஸ் உதிரி பாகங்கள், தனிப்பட்ட பராமரிப்பு மற்றும் ஆரோக்கியம் மற்றும் வீட்டு அலங்காரப்பொருட்கள் ஆகியவற்றை வாடிக்கையாளர்கள் ஆர்டர் செய்திருக்கிறார்கள். ஆன்லைன் வர்த்தகத்தை அனைவரிடத்திலும் கொண்டு செல்ல வேண்டும் என்ற நோக்கில் செயல்பட்டு வரும் மீஷோவில் 60 சதவீதத்திற்கும் மேற்பட்ட ஆர்டர்கள் நான்கிற்கும் மேற்பட்ட நகரங்களில் இருந்து வந்துள்ளன. இது குறைந்த விலையில் தரமான பொருட்கள் விற்பனை என்பதோடு இந்நிறுவனத்தின் நம்பகத்தன்மைக்கு எடுத்துக்காட்டாக உள்ளது. அத்துடன் இந்த இணையதளத்தில் பண்டிகை காலத்தில் பொருட்கள் வாங்கியவர்களின் எண்ணிக்கையானது 60 சதவீதத்தை கடந்துள்ளது. இதில் ஆன்லைன் வர்த்தகத்திற்கு புதிதாக வந்தவர்களும், முதல்முறையாக ஆன்லைனில் ஷாப்பிங் செய்தவர்களும் உள்ளனர். தமிழகத்தை பொறுத்தவரை மதுரை, திண்டுக்கல் முதல் ஈரோடு மற்றும் சேலம் வரை, மீஷோவின் மெகா பிளாக் பஸ்டர் விற்பனையானது சென்றடைந்து வாடிக்கையாளர்களிடம் மிகுந்த வரவேற்றை பெற்றிருக்கிறது. நாடு முழுவதிலும் இருந்து ஆர்டர்கள் வரும் சூழலில், பண்டிகை காலத்தில் மீஷோவில் சிறு வணிக நிறுவனங்கள் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை கண்டன. ஆன்லைனில் முதல் முறையாக மீஷோவின் ஜீரோ விற்பனை கமிஷன் திட்டம் சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் ஆன்லைன் வர்த்தகத்திற்கு வருவதற்கு மிகுந்த உதவியாக அமைந்தது. இதன் காரணமாக பண்டிகை கால விற்பனையை பொறுத்தவரை தமிழகத்தில் 1,122 விற்பனையாளர்கள் தங்கள் பொருட்களின் விற்பனை மூலம் லட்சாதிபதிகளாகவும், 20 விற்பனையாளர்கள் கோடீஸ்வரர்களாகவும் மாறி உள்ளனர்.

இது குறித்து மீஷோ நிறுவனத்தின் வினியோக வளர்ச்சிப்பிரிவின் தலைமை அனுபவ அதிகாரி லட்சுமி நாராயண் சுவாமிநாதன் கூறுகையில், நம்நாட்டில் தொழில்முனைவோர் உணர்வை ஆதரிக்கும் வகையிலும், சிறு வணிக நிறுவனங்களை ஆன்லைனிற்கு கொண்டு வந்து அவர்களை வளர்ச்சி காணச்செய்யும் நோக்கில் எங்கள் நிறுவனம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. எங்களின் ஜீரோ கமிஷன், ஜீரோ அபராத திட்டத்தின் காரணமாக ஏராளமான சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் எங்கள் ஆன்லைனில் இணைந்துள்ளன. இதன் காரணமாக எங்களின் விற்பனையானது கடந்த ஆண்டில் இதே காலக்கட்டத்துடன் ஒப்பிடுகையில் தற்போது 3 மடங்கு அதிகரித்து இருப்பதை எங்களால் காண முடிகிறது. பண்டிகைக்காலத்தில், தமிழகத்தை சேர்ந்த விற்பனையாளர்கள் 18 கோடி ரூபாய் அளவிலான கமிஷன்களை சேமித்துள்ளனர், இந்தியாவில் ஆன்லைன் வர்த்தகத்தை அனைவரிடமும் கொண்டு செல்லும் நோக்கில் நாங்கள் சிறப்பாக செயல்பட்டு வருகிறோம் என்று தெரிவித்தார். மீஷோவில் பொருட்களை விற்பனை செய்யும் மதுரையை சேர்ந்த விற்பனையாளர் பூங்கோதை ராஜன் கூறுகையில், சொந்தமாக தொழில் துவங்குவதே எனது குறிக்கோளாக இருந்தது. இந்த நிலையில் உள்ளூர் சந்தையில் இருந்து மொத்தமாக புடவைகளை எடுத்து ஆன்லைன் இணையதளம் மூலம் சில்லறை விற்பனை செய்து சிறிய அளவில் வியாபாரத்தை தொடங்கினேன். மீஷோவின் ஜீரோ கமிஷன் திட்டம் என்னுடைய அதிவேக வளர்ச்சியை உறுதி செய்த அதே வேளையில் சரியான விலையில் புடவைகளை விற்பனை செய்யவும் எனக்கு உதவியது. இந்த நிலையில் தற்போது எனக்கு மாதத்திற்கு 2 லட்சம் ஆர்டர்கள் கிடைக்கின்றன என்று தெரிவித்தார். இந்த பண்டிகைகாலத்தில் சமையலறை பொருட்களை பொறுத்தவரை 116 சதவீதமும், அழகு மற்றும் தனிப்பட்ட பராமரிப்பை பொறுத்தவரை 109 சதவீதமும், பயணத்திற்கு தேவையான பைகள் மற்றும் சூட்கேஸ்களை பொறுத்தவரை 99 சதவீதமும் உயர்ந்துள்ளது. இதில் அழகுசாதனப்பொருட்கள், வீடு மற்றும் சமையலறைக்கு தேவையான பொருட்கள், எலக்ட்ரானிக்ஸ் உதிரிபாகங்கள் மற்றும் அழகு மற்றும் தனிப்பட்ட பராமரிப்பு பொருட்கள் அதிக அளவில் விற்பனையாகி உள்ளன. இவற்றில் புடவை, புளூடூத் ஹெட்போன், துப்பட்டா, லிப்ஸ்டிக், ஸ்மார்ட் கைக்கடிகாரங்கள், செயற்கை செடிகள் மற்றும் ஜூசர்கள் போன்றவை அதிக அளவில் விற்பனையான பொருட்கள் ஆகும்.

# அயோடின், பெண்களுக்கு மிக முக்கியமான ஊட்டச்சத்து தேவை ஆகும்

### டாக்டர் வைபவ் சுரேஷ், நோய் தடுப்பு நிபுணர்
### ஃபோர்டிஸ் மருத்துவமனை, வடபழனி

சென்னை, டிசம்பர் 17 2022: அயோடின் தைராய்டு ஹார்மோன்களை உற்பத்தி செய்ய தேவையான ஒரு அத்தியாவசிய நுண்ணூட்டச்சத்து ஆகும். இந்த தைராய்டு ஹார்மோன்கள் தைராய்டு சுரப்பியின் இயல்பான செயல்பாடு, வளர்ச்சி மற்றும் வளர்ச்சிக்கு பொறுப்பாகும். அயோடின் குறைபாடு முக்கியமாக அயோடின் குறைபாடு கோளாறுகள் எனப்படும் நோய்க்கு மற்றும் பல உடல்நலம் சார்ந்த உபாதைகளுக்கும் வழிவகுக்கும். கர்ப்ப காலத்தில் மற்றும் குழந்தை பருவத்தில் அயோடின் குறைபாடு தீங்கு விளைவிக்கும்.



உலக சுகாதார அமைப்பு கூறுகிறது, பள்ளி வயது குழந்தைகளின் சராசரி சிறுநீர் அயோடின் செறிவு குறைந்தது 100யுஜி/லி இருக்க வேண்டும், 20% க்கும் குறைவான மதிப்புகள் 50ஞுரீ/லி க்கும் குறைவாக இருக்க வேண்டும். கர்ப்பிணிப் பெண்களுக்கு, சராசரி சிறுநீர் அயோடின் 150யுஜி/லி மற்றும் 249யுஜி/லி இடையே இருக்க வேண்டும்.

**அயோடின் குறைபாட்டின் விளைவுகள்**

ஐயோடின் குறைபாட்டின் பல விளைவுகளில், ஐ டி டி ஆனது பிரசவம், தன்னிச்சையான கருக்கலைப்பு, குழந்தை இறந்து பிறப்பது மற்றும் பிறவி கிரெட்டினிசம் - இது அயோடின் குறைபாட்டுடன் வாழும் மக்களைப் பாதிக்கும் மனநலம் குன்றிய ஒரு தீவிரமான, மாற்ற முடியாத வடிவமாகும் - போன்ற நோயில் முடியலாம் இன்னும் அதிக முக்கியத்துவம் வாய்ந்தது, குறைவாகக் காணக்கூடிய, ஆனால் பரவலான, மனநலக் குறைபாடு, இது அறிவுத் திறனைக் குறைக்கிறது மேலும் இது கற்றல் திறனை குறைக்கிறது. குழந்தைகள் மத்தியில், அயோடின் குறைபாடு குறைபாடுகள் பிறப்பதற்கு முன்பே தொடங்கலாம்; அவர்களின் மன ஆரோக்கியம் மற்றும் பெரும்பாலும் அவர்களின் உயிர்களைப்பத்திற்க்கான ஆபத்தை அதிகரிக்கிறது. குழந்தை பருவத்தில் மற்றும் இளமை பருவத்தில், அயோடின் குறைபாடு ஹைப்போதைராய்டிசத்திற்கு வழிவகுக்கும்.

**பெண்களின் ஆரோக்கியத்திற்கான அயோடின்: கருவுறுதல், கர்ப்பம் மற்றும் பாலூட்டுதல்**

கருப்பையில் குழந்தையின் வளர்ச்சிக்கும், வாழ்க்கையின் ஆரம்ப ஆண்டுகளில் வளர்ச்சிக்கும் அயோடின் முற்றிலும் அவசியம். குறைந்த அயோடின் நிலை கொண்ட பெண்கள் கருத்தரிக்க அதிக நேரம் எடுத்துக்கொள்கிறார்கள். கருப்பையில் கடுமையான அயோடின் குறைபாடு கருச்சிதைவு, இறந்து பிறத்தல், பிறவி குறைபாடுகள் மற்றும் குறைந்த பிறப்பு எடை ஆகியவற்றுடன் தொடர்புடையது. தைராய்டு வளர்ச்சிக்கும் மூளை வளர்ச்சிக்கும் அயோடின் மிகவும் முக்கியமானது. கர்ப்ப காலத்தில் லேசான அயோடின் குறைபாடு கூட குழந்தைகளில் நரம்பியல் மற்றும் அறிவாற்றல் குறைபாடுகளுடன் தொடர்புடையது.

அயோடின் குறைபாடு மார்பக புற்றுநோயின் அபாயத்தையும் தூண்டுகிறது. அயோடின் குறைபாடு ஃபைப்ரோசிஸ்டிக் மார்பக நோயின் அபாயத்துடன் தொடர்புடையது; ஒன்று அல்லது இரண்டு மார்பகங்களிலும் கட்டிகளால் வகைப்படுத்தப்படும் ஒரு நிலை.

**பெண்களின் இனப்பெருக்க அமைப்பு**

பெண்களின் இனப்பெருக்க ஆரோக்கியத்தில் அயோடின் பல முக்கிய பங்கு வகிக்கிறது, கருப்பையில் இருந்து முட்டை வெளியிடுவதில், புரோஜெஸ்ட்டிரோன் உற்பத்தி மற்றும் ஈஸ்ட்ரோஜன் வளர்சிதை மாற்றத்திற்கு தேவைப்படுகிறது. மருத்துவ ரீதியாகப் கூறினால், மாதவிடாய் சுழற்சியின் இரண்டாம் பாதியில் விரும்பத்தகாத அறிகுறிகளை அனுபவிக்கும் சில பெண்களுக்கு அயோடின் பயனுள்ளதாக இருக்கும், அதாவது மாதவிடாய்க்கு முந்தைய மார்பக மென்மை, குறைந்த புரோஜெஸ்ட்டிரோன் மற்றும் ரிவிஷி போன்றவை.

**அயோடின் மற்றும் தைராய்டு**

தைராய்டில் உடலில் உள்ள எந்த திசுக்களிலும் விட அயோடின் அதிக செறிவு உள்ளது (ஆண்கள் மற்றும் பெண்கள் இருவருக்குள்ளும்), இது உடலின் அயோடின் தேவையின் 70-80% ஆகும். உண்மையில், நாம் தினசரி பரிந்துரைக்கப்படும் அயோடின் உட்கொள்ளலில் பாதிக்கும் மேலானது தைராய்டு ஹார்மோன் உற்பத்திக்காக மட்டுமே பயன்படுத்தப்படுகிறது.

போதிய அயோடின் இல்லாவிட்டால், தைராய்டு சுரப்பியானது இரத்தத்தில் இருந்து அதிக அயோடினைப் பிடிக்கும் முயற்சியில் வீங்கி, அசௌகரியம், கரகரப்பு அல்லது விழுங்குவதில் சிரமத்தை ஏற்படுத்தும். போதுமான அயோடின் உட்கொள்ளல் இல்லையென்றால், தைராய்டு ஹார்மோன் உற்பத்தி குறையத் தொடங்கும், இது சோர்வு, எடை அதிகரிப்பு, மலச்சிக்கல், மாதவிடாய் முறைகேடுகள் மற்றும் முடி உதிர்தல் போன்ற ஹைப்போதைராய்டிசத்தின் அறிகுறிகளுக்கு வழிவகுக்கும்.

**அயோடின் குறைபாட்டிற்கான சிகிச்சை**

இது பொதுவாக அயோடின் கொண்ட உணவுகள், அயோடின் உப்பு மற்றும் அயோடின் இணை உணவுகள் சிகிச்சையாக பரிந்துரைக்கப்படுகிறது. ஹைப்போ தைராய்டிசம் உள்ளவர்கள் பொதுவாக தைராய்டு ஹார்மோனின் செயற்கை வடிவத்துடன் சிகிச்சை அளிக்கப்படுகிறார்கள், அதை அவர்கள் வாழ்நாள் முழுவதும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

பெரும்பாலான மக்கள் கடல் உணவுகள் போன்ற அயோடின் நிறைந்த உணவுகளை சாப்பிடுவதன் மூலம் போதுமான அயோடின் பெறலாம். உங்கள் உணவில் அயோடின் அளவை அதிகரிக்க நீங்கள் சிறிய அளவு அயோடைஸ்டு உப்பைப் பயன்படுத்தலாம் மற்றும் பேக்கேஜ் செய்யப்பட்ட ரொட்டியை சாப்பிடலாம்.

கர்ப்பத்தைத் திட்டமிடும் பெண்கள், அயோடின் சப்ளிமெண்ட் எடுப்பதற்கு முன், மகப்பேறு மருத்துவர் / பொது மருத்துவரிடம் ஆலோசனை பெறுவது நல்லது, ஏனெனில் உடலுக்குத் தேவையானதை விட அயோடினை அதிகமாக உட்கொள்வது தைராய்டு பிரச்சினைகளை ஏற்படுத்தலாம் அல்லது கடுமையான பக்க விளைவுகளை ஏற்படுத்தலாம். எனவே பரிந்துரைக்கப்பட்ட வரம்புகளுக்குள் அயோடின் உட்கொள்வது மிகவும் பரிந்துரைக்கப்படுகிறது.

# ராஜ்நந்தினி மெட்டல்ஸ் லிமிடெட் - ன் பெரும் விரிவாக்கத் திட்டம்!
## தனது பங்குதாரர்களுக்கு போனஸையும் இந்நிறுவனம் வழங்குகிறது

சென்னை, டிசம்பர் 17 2022: தாமிரத்தில் தொடர்ச்சியான வார்ப்பு கம்பிகள் (சி சி ஆர்) தயாரிப்பில் இந்தியாவில் முன்னணி நிறுவனமான ராஜ்நந்தினி மெட்டல்ஸ் லிமிடெட், தனது பிசினஸ் செயல்பாடுகளை விரிவாக்கும் நோக்கத்தோடு ஹரியானா மாநிலத்தில் பவல் ஐ எம் டி அமைவிடத்தில் ஏறக்குறைய 55000 சதுரஅடி பரப்பளவுள்ள நிலத்தை வாங்கியிருப்பதாக தேசிய பங்குச்சந்தை நிறுவனத்திற்கு தெரிவித்திருக்கிறது. ஹரியானாவை அடித்தளமாக கொண்ட இந்நிறுவனம், 2 ஏக்கர்கள் பரப்பளவில் நவீன இயந்திரங்களையும், விரிவான தாமிர சுத்திகரிப்பு செயல்முறைகள் பயன்பாட்டையும் கொண்டிருக்கிறது. தனது தொழிலக விரிவாக்கத்திற்காக அருகிலுள்ள நிலப்பரப்பை இந்நிறுவனம் ஏற்கனவே வாங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்த விரிவாக்கத் திட்டத்தின் மூலம் வருடாந்திர அளவில் தனது விற்றுமுதல் ரூ.400 கோடி அல்லது அதற்கும் அதிகமாக உயரும் என்று மதிப்பிட்டிருக்கிறது; அதுபோலவே வருடாந்திர அளவில் லாபமும் 20 கோடி அல்லது அதற்கு அதிகமாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. புதிதாக வாங்கப்பட்டிருக்கும் நிலப்பரப்பில் தொழிலக கட்டுமான நடவடிக்கைகள் ஏற்கனவே தொடங்கியிருக்கிறது.

கே ஈ ஐ இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், மெட்டல்ஸ் போன்றவை உட்பட பல பெருநிறுவனங்களிடமிருந்து மொத்தத்தில் ரூ.30.29 கோடி தொகைக்கு ராஜ்நந்தினி மெட்டல்ஸ் லிமிடெட் சமீபத்தில் ஆர்டர்களைப் பெற்றிருக்கிறது. இந்தியா லகோவிட் தொற்று பரவல் சூழல் இருந்தபோதிலும் கூட, நிதியாண்டு 2021-22-ல் இந்நிறுவனத்தின் விற்றுமுதல் ரூபாய் 1000 கோடிக்கும் அதிகமாக இருந்திருப்பது குறிப்பிடத்தக்கது. முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், இந்த வளர்ச்சி விகிதம் 63% ஆகும். அதிக எண்ணிக்கையிலான வாங்குனர்கள் மற்றும் மூலப்பொருட்கள் வழங்குனர்களுடன் கொண்டிருக்கும் உறவுகளைத் தொடர்ந்து மேம்படுத்தி வருவதன் மூலம் இந்தியா முழுவதிலும் செயல்பாடுகளை இந்நிறுவனம் கொண்டிருக்கிறது மற்றும் 15 நாடுகளில் பிசினஸ் நடவடிக்கைகளை விரிவாக்கும் சாத்தியத்திறனை இது கொண்டிருக்கிறது. போக்குவரத்து தொடர்பாக பிரச்சனைகள் ஏதும் எழுவதை நீக்குவதற்காக மூடப்பட்ட மற்று; மூடப்படாத பாடிகளைக் கொண்ட டிரக்குகளின் தொகுப்பை இந்நிறுவனம் சொந்தமாக கொண்டிருக்கிறது. லாஜிஸ்டிக்ஸ் தொடர்பான செயல்பாடுகளை இதன்மூலம் திறம்பட மேற்கொள்ளும் திறன் இந்நிறுவனத்திற்கு இருக்கிறது.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் புதிய இன்னோவா ஹைக்ராஸ் காரை அறிமுகப்படுத்துகிறது




சென்னை, டிசம்பர் 17 2022: டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் இன்னோவா ஹைக்ராஸ் என்ற சுய-சார்ஜிங் ஸ்ட்ராங் ஹைப்ரிட் எலக்ட்ரிக் வாகனத்தை வெளியிட்டதன் மூலம் இன்னோவாவின் பயணத்தில் ஒரு புதிய சகாப்தத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. டொயோட்டாவின் புதிய உலகளாவிய கட்டமைப்பின் அடிப்படையில், சமீபத்திய இன்னோவா, இந்திய வாடிக்கையாளர்களைக் கவரும் வகையில், டொயோட்டாவின் உலகளாவிய அங்கீகாரம் பெற்ற தரம், நீடித்துழைப்பு மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பத்தின் நம்பகத்தன்மை ஆகியவற்றைக் கொண்டாடுகிறது.

புதிய இன்னோவா ஹைக்ராஸ் ஆனது டி என் ஜி ஏ 2.0 லிட்டர் 4-சிலிண்டர் பெட்ரோல் எஞ்சின் மற்றும் 137 கே டபிள்யூ (186 பி எஸ்) அதிகபட்ச ஆற்றலை வழங்கும் இ-டிரைவ் சீக்வென்ஷியல் ஷிஃப்ட்டுடன் கூடிய மோனோகோக் சட்டத்துடன் கூடிய 5வது தலைமுறை சுய-சார்ஜிங் வலுவான ஹைப்ரிட் எலக்ட்ரிக் சிஸ்டம் மூலம் இயக்கப்படுகிறது. விரைவான முடுக்கம் மற்றும் பிரிவு எரிபொருள் சிக்கனத்தில் சிறந்தது. இந்த வாகனம் டி என் ஜி ஏ 2.0 லிட்டர் 4-சிலிண்டர் பெட்ரோல் எஞ்சினுடன் 128 கே டபிள்யூ (174 பி எஸ்) வெளியீட்டை வழங்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட தரங்களில் நேரடி ஷிப்ட் சி வி டி உடன் இணைக்கப்பட்டுள்ளது.

குடும்பத் தேவைகளுக்காக வடிவமைக்கப்பட்ட, புதிய இன்னோவா ஹைக்ராஸ் அம்சம் ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கும் கவர்ச்சி, கடினத்தன்மை, ஆறுதல், பாதுகாப்பு மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பத்தை வழங்கும் ஒரு வாகனமாகும். டொயோட்டாவின் செழுமையான உலகளாவிய எஸ் யூ வி பாரம்பரியத்தில் இருந்து உத்வேகம் பெற்ற புதிய இன்னோவா ஹைக்ராஸ், அனைவருக்கும் நெகிழ்வான மற்றும் வசதியான இருக்கைகளை வழங்கும், போதுமான இடவசதியுடன் கூடிய தசை மற்றும் கடினமான வடிவமைப்பைக் கொண்டுள்ளது. இந்த பல்துறை வாகனம் கடினமான சாலைகளைக் கையாளக்கூடிய மற்றும் தடையற்ற, சோர்வு இல்லாத வாகனத்தை வழங்கும் வாகனத்தை விரும்பும் குடும்பங்களை நோக்கமாகக் கொண்டுள்ளது.

சுய-சார்ஜிங் ஸ்ட்ராங் ஹைப்ரிட் எலக்ட்ரிக் வாகனமாக (எஸ் எச் ஈ வி), இன்னோவா ஹைக்ராஸ் 40% தூரத்தையும், 60% நேரத்தையும் எலக்ட்ரிக்(ஈ வி) அல்லது ஜீரோ எமிஷன் முறையில் இயக்கும் திறன் கொண்டது.

புதிய இன்னோவா ஹைக்ராஸ் ஆனது புகழ்பெற்ற டொயோட்டாவின் புதிய உலகளாவிய கட்டமைப்பின் அனுபவத்தை 3 ஆண்டுகள்/100,000 கிலோமீட்டர்கள் உத்தரவாதம் மற்றும் 5 ஆண்டுகள்/220,000 கிலோமீட்டர்கள் வரை நீட்டிக்கப்பட்ட உத்தரவாதம், 3 ஆண்டுகள் இலவச சாலையோர உதவி, கவர்ச்சிகரமான நிதி திட்டங்கள் மற்றும் 8 ஆண்டுகள்/160,000 கிலோமீட்டர் வாரன்டி ஆகியவற்றின் மூலம் வழங்குகிறது. ஹைப்ரிட் பேட்டரி.

50,000க்கு முன்பதிவு இன்று தொடங்குகிறது. வாடிக்கையாளர்கள் தங்கள் முன்பதிவுகளை www.toyotabharat.com/online-booking/ என்ற இணையதளத்தில் செய்யலாம் அல்லது அருகிலுள்ள டொயோட்டா டீலர்ஷிப்பைப் பார்வையிடலாம். மேலும் விவரங்களுக்கு, வாடிக்கையாளர்கள் www.toyotabharat.com இல் உள்நுழையலாம்.

# ரியல்மி 10 ப்ரோ சீரிஸ் இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டது, இது ரூ .17,999 முதல் விலைப் பிரிவில் பயனர்களுக்கு நம்பர் சீரிஸ™டன் சிறந்த மேம்பட்ட அம்சங்களை வழங்குகிறது

சென்னை, டிசம்பர் 17 2022: 5ஜி தொழில்நுட்பத்துடன் கூடிய ஸ்மார்ட்போனை அறிமுகப்படுத்திய இந்தியாவின் முதல் பிராண்ட் மற்றும் மிகவும் நம்பகமான தொழில்நுட்ப பிராண்டான ரியல்மி இன்று அதன் சமீபத்திய யூத் ஃபிளாக்ஷிப் ஸ்மார்ட்போன்களை அறிமுகப்படுத்தியது - ரியல்மி 10 ப்ரோ+ 5ஜி மற்றும் ரியல்மி 10 ப்ரோ 5ஜி. ரியல்மி 10 ப்ரோ சீரிஸ் 5ஜி ஒரு அற்புதமான டிஸ்ப்ளே, ஒரு முதன்மை கேமரா, சிறந்த பெர்ஃபார்மென்ஸை வழங்க சக்திவாய்ந்த 5ஜி ப்ராசஸர்கள் மற்றும் ரியல்மி யுஐ 4.0 ஆகிய மேம்பட்ட அம்சங்களைக் கொண்டு சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது. ரியல்மி தனது நம்பர் சீரிஸ் சமீபத்தியஸ்மார்ட்ஃபோனை வெளியிட்டு, மீண்டும் பயனர்களுக்கு அனைத்து மேம்பட்ட அம்சங்களையும் உள்ளடக்கி சிறந்த வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்குகிறது, அதே நேரத்தில் நடுத்தர முதல் உயர்-தர ஸ்மார்ட்போன்கள் பிரிவிலும் தொடர்ந்து விற்பனையை அதிகரித்து வருகிறது.

இது குறித்து ரியல்மி இந்தியாவின் தலைமை நிர்வாக அதிகாரியும் ரியல்மியின் துணைத் தலைவரும் மற்றும் ரியல்மி இன்டர்நேஷனல் பிசினஸ் குரூப்பின் தலைவருமான மாதவ் சேத் கூறுகையில், "ரியல்மி நம்பர் சீரிஸ் இந்தியாவிலும், உலக முழுவதும் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு மிகவும் பிடித்தமான மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சீரிஸ்களில் ஒன்றாகும். இளைஞர்களுக்கான எங்கள் உறுதிப்பாட்டைக் கருத்தில் கொண்டு, லீப்-ஃபார்வர்ட் தொழில்நுட்பங்கள் மூலம் ஒவ்வொரு நம்பர் சீரிஸ் புராடக்ட்டுகளிலும் குறைந்தது ஒரு லீப்-ஃபார்வர்ட் அதாவது மேம்பட்ட அம்சத்தை நாங்கள் எப்போதுமே வழங்கியுள்ளோம், இது போன்ற அம்சம் இத்தகைய விலைப் பிரிவில் கிடைப்பது சிறந்த ஒன்றாகும். ரியல்மி 10 ப்ரோ சீரிஸ் 5ஜி மூலம், நம்பர் சீரிஸில் அதிக சந்தை சார்ந்த அம்சங்களைக் கொண்டு வருவதும், பயனர்களுக்கு ஒரு குறிப்பிட்ட அளவிலான உயர்தரமான மேம்பட்ட அம்சங்களைக் கொண்டுவருவதுமே எங்கள் நோக்கமாகும். இந்த இரண்டு ஸ்மார்ட்போன்களிலும்ஃ பிளாக்ஷிப் லெவல் டிஸ்ப்ளேக்கள் மற்றும் சக்திவாய்ந்த 5ஜி ப்ராசஸர்கள் இடம்பெற்றுள்ளன, இது இந்தியாவில் 5ஜி தொழில்நுட்பத்தை அனைவருக்கும் சமமாக கிடைக்கச் செவதற்கான எங்கள் உறுதிப்பாட்டில் கவனம் செலுத்துகிறது. உலகளவில் 50 மில்லியன் நம்பர் சீரிஸ் பயனர்களை நாங்கள் வெற்றிகரமாக அடைந்துள்ளோம், இதில் 30 மில்லியன் பயனர்கள் இந்தியாவைச் சேர்ந்தவர்கள், சந்தேகத்திற்கு இடமின்றி எங்கள் பயனர்கள் ரியல்மி 10 ப்ரோ சீரிஸ் 5ஜி ஸ்மார்ட்ஃபோனை அற்புதமான ஒன்றாக காண்பார்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை " என்று அவர் கூறினார்.

நம்பர் சீரிஸ் மூலம் அடுத்த கட்ட வளர்ச்சியில் காலடி வைத்துள்ள ரியல்மி ஒரு புதிய ஏ-லெவல் ரியல்மி "ஸ்பைர்" கார்ப்பரேட் உத்தியை அறிமுகப்படுத்தியது. நம்பர் சீரிஸில் உள்ள ஒவ்வொரு புராடக்ட்டும் இப்போது ஒரு வலுவான ரியல்மி புராடக்ட் கோபுரத்தின் சிகரமாக இருக்கும் மற்றும் ஒரு குறிப்பிடத்தக்க தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.

வாடிக்கையாளர்களுக்கு ஆச்சரியப்படுத்தும் 5ஜி அனுபவத்தை வழங்கிட ரியல்மி 10 ப்ரோ+ 5ஜி மற்றும் ரியல்மி 10 ப்ரோ 5ஜி ஸ்மார்ட்ஃபோன்கள் எஸ்ஏ சப்போர்ட்டுடன் மிகச்சிறந்த ஒரு ஸ்மார்ட்ஃபோனாக வெளியிடப்படுகிறது, ரியல்மி 10 ப்ரோ+ 5ஜி இல் 9 5ஜி பேண்டுகள் மற்றும் ரீயல்மி 10 ப்ரோவில் 7 5ஜி பேண்டுகள் உள்ளன.

, உண்மையான 5ஜி அனுபவத்தை வழங்கிட மிகச்சிறந்த 5ஜி எஸ்ஏ, என் ஆர் சி ஏ, விவோஎன்ஆர் மூலம் புராடக்ட்டுகளில் பல்வேறு புதுமைகளைச் செய்ய ஜியோவுடன் ரியல்மி கைக்கோர்த்துள்ளது. ஜியோவுடன் இணைந்து எங்கள் வாடிக்கையாளர்களுக்கு தொடர்ந்து ஏராளமான சிறந்த சலுகைகளைப் பெற முயற்சிக்கிறோம்.

ரியல்மி 10 ப்ரோ சீரிஸ் கொண்டுவரும் புதிய கனெக்ட்டிவிட்டி சகாப்தத்தை அனைவரும் பெறக்கூடிய வகையில் குறிப்பிட்ட சில ரியல்மி ஷோரூம்களில் ட்ரூ 5ஜி எக்ஸ்பீரியன்ஸ் மண்டலத்தை அமைக்க ஜியோவுடன் ரியல்மி கூட்டு சேர்ந்துள்ளது.

இது குறித்து ஜியோ பிளாட்ஃபார்ம்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி கிரண் தாமஸ் கூறுகையில், "எங்கள் முக்கிய பார்ட்னரான ரியல்மி உடனான மற்றொரு மைல்கல் கூட்டுறவில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். ரியல்மி 10 ப்ரோ+ போன்ற சக்திவாய்ந்த 5ஜி ஸ்மார்ட்போனின் உண்மையான சக்தியை ஜியோ போன்ற ட்ரூ 5ஜி நெட்வொர்க் மூலம் வெளிக்கொண்டுவர முடியும். இதைத்தான் இந்த கூட்டணி வெளிப்படுத்தும். ஜியோ ட்ரூ 5ஜி இந்தியாவில் மட்டுமல்ல, உலகளவிலும் மிகவும் மேம்பட்ட ஒரு நெட்வொர்க் ஆகும். ஜியோ ட்ரூ 5ஜி மூன்று மடங்கு நன்மையைக் கொண்டுள்ளது, இது இந்தியாவின் ஒரே உண்மையான 5ஜி நெட்வொர்க்காக இதனை ஆக்குகிறது:

1. 4 ஜி நெட்வொர்க்கில் சிறிதும் சார்ந்திருக்காமல் மேம்பட்ட 5 ஜி நெட்வொர்க்குடன் தனித்து நிற்கும் 5ஜி கட்டமைப்பு

2. 700 மெகா ஹெர்ட்ஸ், 3500 மெகாஹெர்ட்ஸ் மற்றும் 26 ஜிகாஹெர்ட்ஸ் பேண்ட்களில் மிகப்பெரிய மற்றும் சிறந்த 5ஜி ஸ்பெக்ட்ரம் கலவை

3. கேரியர் அக்ரிகேஷன் எனப்படும் மேம்பட்ட தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இந்த 5ஜி ஃப்ரிக்வென்ஸிஸை ஒரே வலுவான "தரவு நெடுஞ்சாலையாக" தடையின்றி இணைக்கும் கேரியர் அக்ரிகேஷன்

எங்கள் வாடிக்கையாளர்களுக்கு ரியல்மியுடன் சேர்ந்து இதுவரை கண்டிராத பயனர் அனுபவங்களை உருவாக்க நாங்கள் ஆவலுடன் காத்திருக்கிறோம்.

# ஆக்சிஸ் வங்கி, குறு,சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்காக 'இவால்வ்' இன் 7வது பதிப்பை அறிமுகப்படுத்துகிறது

சென்னை, டிசம்பர் 17 2022: இந்தியாவின் மூன்றாவது பெரிய தனியார் துறை வங்கியான ஆக்சிஸ் வங்கி சென்னையில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்காக வருடாந்திர அறிவுப் பகிர்வு கருத்தரங்கான ' இவால்வ் ' இன் 7வது பதிப்பை நடத்தியது. இந்த ணிஸ்ஷீறீஸ்மீ இன் 7வது பதிப்பு, 'இந்திய எஸ்எம்ஈகள்: அடுத்த நிலை வளர்ச்சிக்கான நகர்வு' என்ற முக்கிய கருப்பொருளுடன் 'புதிய உலக ஒழுங்கில் எஸ்எம்ஈகளுக்கான ஏற்றுமதி வாய்ப்புகள்' மற்றும் 'இந்திய எஸ்எம்ஈகளை உருவாக்க டிஜிட்டல் மயமாக்கல்' ஆகிய இரண்டு துணை கருப்பொருள்களில் கவனம் செலுத்தியது. இந்த கருத்தரங்கில் ஆக்சிஸ் வங்கியின் கமெர்ஷியல் பாங்கிங் கவரேஜ் குரூப் இன் தலைவர் சங்ராம் சிங் உரையாற்றினார்.

இந்த இவால்வ் இன் 7வது பதிப்பு, தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் எவ்வாறு ஏற்றுமதியில் இருந்து அதிவேக வளர்ச்சியை அடைய உதவும் என்பதை ஆராயும், இது குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் இலாபம் மற்றும் சந்தை இருப்பை அதிகரிப்பதில் கவனம் செலுத்தும் முக்கிய பகுதியாகும். இவால்வ் மூலம், ஆக்சிஸ் வங்கியானது, குறு,சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் தொடர்பு கொள்ளவும், பல ஆண்டுகளாக தங்கள் வணிகங்களை மாற்றியமைத்துள்ள தொழில்துறை சிந்தனை தலைவர்களிடம் இருந்து கற்றுக்கொள்ளவும் ஒரு தளத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த துவக்கத்தின் போது, ஆக்சிஸ் பேங்க் இன் கமெர்ஷியல் பாங்கிங் கவரேஜ் குரூப் இன் தலைவர் சங்ராம் சிங் , "குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் நமது தேசத்தின் வளர்ச்சியின் இயக்கிகள் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம், மேலும் முன்னேற்றத்தில் பங்குதாரர்களாக, ஆக்சிஸ் வங்கியில் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு தங்கள் வணிகங்களை முழுமையாக விரிவுபடுத்துவதற்கு உதவ நாங்கள் நிதி மற்றும் நிதி அல்லாத சேவைகள் ஆகிய இரண்டையும் வழங்க முயற்சிக்கிறோம். அவர்களின் பயணத்தில் உண்மையான பங்குதாரராக எங்களின் அர்ப்பணிப்பு மற்றும் பங்கை வலுப்படுத்தும் நோக்கத்துடன், வழக்கமான வங்கிச்சூழல்களுக்கு அப்பால் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு நாங்கள் எப்போதும் எங்கள் ஆதரவை வழங்குகிறோம்." என்று கூறினார்.

இந்த குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவன துறையானது அதன் ஏற்றுமதி பங்கை உயர்த்துவதற்கு அபரிமிதமான ஆற்றலைக் கொண்டுள்ளது. தொழில்துறை சவால்கள் இருந்தபோதிலும், அரசாங்க ஆதரவு, டிஜிட்டல் கருவிகள், நிதி மற்றும் தொழில்நுட்பத்திற்கான மேம்பட்ட அணுகல், வர்த்தக வசதி மற்றும் உலகளாவிய சந்தைகள் போன்ற நேர்மறையான போக்குகள், குறு,சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு சாதகமான நிலைமைகளைப் பயன்படுத்திக் கொள்ளவும் அடுத்த கட்டத்திற்கு வளர்ச்சியைத் தூண்டுவதற்கும் அதிகாரம் அளித்துள்ளன.

ஆக்சிஸ் வங்கி, தனது அறிவுப் பகிர்வு கூட்டாளியான டன் & பிராட்ஸ்ட்ரீட் உடன் இணைந்து மும்பை, இந்தூர், புவனேஸ்வர், லக்னோ, கொல்கத்தா, அகமதாபாத் போன்ற 20 நகரங்களில் இவால்வ் ஐ நடத்துகிறது. புது தில்லி, கொச்சி & விஜயவாடா போன்ற நகரங்களில் இந்த நிகழ்வு நிறைவடைந்தது. இந்த அறிவுத் தொடரின் ஒவ்வொரு அமர்வும் நவீன உத்திகள், வழக்கு ஆய்வுகள், செயல்பாட்டு நிபுணத்துவம் மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்பைப் பற்றிய புரிதல், அறிவு மற்றும் வளர்ச்சி செயல்முறையை மேம்படுத்தும் திறன் ஆகியவற்றை உள்ளடக்கும்.

# இந்தியப் பயணத்தில் பிரதீக் குஹாத்தின் 'தி வே தட் லவ்வர்ஸ் டூ' உடனான மேஜிக் தருணங்களை சென்னையில் காணவும்

சென்னை, டிசம்பர் 17 2022: ராடிகோ கைடனின் மேஜிக் தருணங்கள் இசை ஸ்டுடியோவானது விமர்சன ரீதியாகப் புகழ்பெற்ற பாடகர்-பாடலாசிரியர் பிரதீக் குஹாத்தின் உலக சுற்றுப்பயணமான "தி வே தட் லவ்வர்ஸ் டூ" நிகழ்ச்சியை வழங்க புக்மைஷோவுடன் அதன் தொடர்பை அறிவித்தது. அமெரிக்கா மற்றும் ஐரோப்பா முழுவதுதுக்குமான அவரது உலகளாவிய சுற்றுப்பயணத்திற்குப் பிறகு, இரண்டு மாத கால சுற்றுப்பயணத்தின் போது 15 இந்திய நகரங்களில் இந்தப் பாடகர் தன்னுடைய இனிமையான குரலின் மேஜிக்கைப் பரப்பினார். கடந்த வார இறுதியில் மும்பை மற்றும் புனேயில் நடந்த வெற்றிகரமான நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து டிசம்பர் 14 ஆம் தேதிகளில் சென்னை வேளச்சேரியில் உள்ள பீனிக்ஸ் மால் வேடிக்கை நிறைந்த இசை மாலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

பிரதீக் குஹாத்தின் பல நகரங்களுக்கான சுற்றுப்பயணம் கடந்த சில மாதங்களில் சண்டிகர், டெல்லி, சூரத், அகமதாபாத், லக்னோ, ஜெய்ப்பூர், குவஹாத்தி, கொல்கத்தா, இந்தூர் நடந்த வெற்றிகரமான நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து, பெங்களூரு டிசம்பர் 17 ஆம் தேதிகளில் மற்றும் கோவா 18 தேதிகளில் ஆகிய இடங்களுக்குச் செல்லக்கூடியதாக இருக்கும். புது டெல்லியில் இருந்து 'கோ கயே ஹம் கஹான்' புகழ் பாடலை ஒரு மெல்லிசை பியானோ அல்லது ஒரு ஒலி கிட்டார் உதவியுடன் குறைந்தபட்ச தாளத்துடன் அந்தப் பாடலில் ஜொலிக்கிறார். பல வருடங்களாக இந்தப் படிவத்தை பிரதீக் வைத்திருப்பது தனது இசை பாணியில் இருந்து 'இண்டி' லேபிளை நிராகரித்து, முக்கியமான மாற்றத்துக்கு உதவியாக இருந்தது.

சன்பர்ன் இசை விழாவுடன் ஆன அதன் நீண்டகால தொடர்பு உட்பட இசை மற்றும் கலைஞர்களை ஆதரித்து ஊக்குவித்த வரலாற்றை மேஜிக் தருணங்கள் கொண்டுள்ளது. " பல ஆண்டுகளாக இந்தியாவில் சன்பர்ன் இசை விழாவுடனான கூட்டு முயற்சிக்குப் பிறகு, இந்த சொத்துக்கான நிகழ்வுகள் ஸ்பேஸ் புக்மைஷோவில் மற்றொரு தலைசிறந்த நபருடன் கூட்டாளியாக இருப்பதில் ரேடிகோ மகிழ்ச்சியடைகிறது. இந்தப் பல நகரத்தில் இருக்கும் நிகழ்வுடன், மேலும் இளைஞர்களுக்கு துடிப்பான எங்களின் தயாரிப்பை வழங்கும் அதே சமயத்தில் அவர்களின் தாளத்துக்கான எதிரொலியுடன் அவர்களை ஊக்கப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம். இந்தியாவில் இருக்கும் சுதந்திரமான கலைஞர்களுக்காக, பல இசைக் கலைஞர்களின் அனுபவத்தைக் கொண்டு பிரதீக் குஹாத் நிலையான புதைகுழியைத் தாண்டி ஒரு பாதையை கோடிட்டுக் காட்டியுள்ளார். ஃபங்கி பீட்ஸ்க்குப் பதிலாக, தொழில்நுட்ப அடிப்படையிலான தொடர்புடன் இருக்கும் பெரிய குரல் மற்றும் இன்றைய இசை நிலப்பரப்பில் ஆதிக்கம் செலுத்தும் மென்மையான குரல்கள், இன்றைய இசை நிலப்பரப்பில் ஆதிக்கம் செலுத்தும் மென்மையான குரல்கள் மேலும் அவுட்-ஆஃப்-தி-பாக்ஸ் அனுபவத்தை வழங்குகிறது," என்கிறார் ராடிகோ கைதான் லிமிடெட்டின் தலைமை இயக்க அதிகாரி அமர் சின்ஹா.

பிரதீக்கின் இந்திய சுற்றுப்பயணம் டிசம்பர் 18, 2022 அன்று கோவாவில் முடிவடையும்.